**நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி (US$ 12.20 Mn) - 2021**

நகர செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3706 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 4.02 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்ளூராட்சி அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 09 மாகாணங்களின் மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. முன்னுரிமை நகர செயற்திட்டங்களிற்காக உயர் மட்ட தயார்நிலையை அடைந்துகொள்வதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,879 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 1,540 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 10 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 338.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.20 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படும்.. அதில் ரூபா 884 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 5.74 மில்லியன் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 995 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6.46 மில்லியன் மிகுதி தொகை மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | விதிகள் மற்றும் பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 05 மார்ச் 2019 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | தொழிநுட்ப உதவி செயற்திட்டம் பிரகாரம் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நகர செயற்திட்டத்திற்கான பூர்வாங்கல் வசதிகளுக்காக ஐ.அ.டொ. 05 மில்லியன் கடன் தொகையை ஆசிய அபிவிருத்தி வங்கி அங்கீகரித்தது. எனினும், செயற்திட்டத்தின் இயக்குனர்களுக்காக ஒவ்வொரு மாதமும் தலா ரூபா. 60,000 வீதத்தில் மொத்தமாக ரூபா. 960,000 சுற்றறிக்கையின் பந்தி 3.2.1 க்கு முரணாக மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | சம்பள கொடுப்பனவு தொடர்பாக மேலதிக பரிசோதனை மேற்கொள்ள தொடர்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதுடன் மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 05 மார்ச் 2019 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக புறநெகும செயற்திட்டத்தின் நிதி ஆய்வாளருக்கு இவரால் நியமிக்கப்பட்ட பதில் கடமை அடிப்படையின் கீழ் செயற்திட்டத்தின் கணக்காளருக்காக மொத்தம் ரூபா. 675,000 செலுத்தப்பட்டிருந்தன. | சம்பள கொடுப்பனவு தொடர்பாக மேலதிக பரிசோதனை மேற்கொள்ள தொடர்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதுடன் மேலதிக கொடுப்பனவுகளை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயலாற்றல்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| கடன் கிடைப்பனவு மற்றும் நாட்டில் காணப்படும் நிதி இடைவெளி காரணமாக அரசாங்கத்தினால் குழாய்வரிசை செயற்திட்டத்தின் பட்டியலில் இருந்து இரண்டாம் தர நகர நிலைபேறான அபிவிருத்தி செயற்திட்டம் நீக்கப்பட்டது. இதன் விளைவாக, அபிவிருத்திச் செலவாக ரூபா. 176 மில்லியன் ஏற்பட்ட பிறகு நகர செயற்திட்ட தயார்படுத்தல் வசதி செயற்திட்டம் பாதியில் முடிவுறுத்தப்பட்டது. இதனால், செயற்திட்டத்தின் மீது ஏற்பட்ட செலவினம் பயனற்றதாகியது. | அரசாங்கத்தின் நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்குக்கு ஏற்ப செயற்திட்டத்தின் தொடர்ச்சிக்காக வெளி வளங்கள் திணைக்களம், தேசிய திட்டமிடல் மற்றும் எம்பி திணைக்களம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனையுடன் 2022 ஆம் ஆண்டில் வழிமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. பின்னர், செயற்திட்டத்தின் மறுமலர்ச்சிக்காக இரு அமைச்சினால் கூட்டு அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 01 ஏப்ரல் 2022 முதல் 24 மாத காலப்பகுதிக்காக ஏடிபி கடன் 3706 எஸ்ஆர்ஜ இனை நீடிப்பதற்கு 28 மார்ச் 2022 இல் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. | சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |